பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**12 12 2025** **FRIDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளுக்காக 11 ஆயிரத்து 718 கோடி ரூபாய் ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. கொப்பரை தேங்காயின் குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு 12 ஆயிரத்து 27 ரூபாயாக அதிகரிக்கவும் மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

3. மதுரை திருப்பரங்குன்றம் முருகன் கோவில் மலை உச்சியில் தீபம் ஏற்றுவதை தமிழக அரசு தடுத்ததாக பிஜேபி இன்று மக்களவையில் குற்றம் சாட்டியது.

4. தமிழகத்தில் எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 234 ரன் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட் அணியை வென்றது.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

வரும் 2027-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளுக்காக 11 ஆயிரத்து 718 கோடி ரூபாய் ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில், இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று கூறினார்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை முதல் கட்டமாகவும், 2027-ஆம் ஆண்டு பிப்ரவரி மாத்தில் இரண்டாவது கட்டமாகவும் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பில், சாதிவாரி கணக்கெடுப்பும் இணைந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பணிகளில் 30 லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

மேலும், கொப்பரை தேங்காயின் குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு 12 ஆயிரத்து 27 ரூபாயாக அதிகரித்து மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

தென்னை விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 445 ரூபாய் அதிகரிக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகளை அடுத்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், கட்டுமானப் பணிகளுக்காக இதுவரை 421 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு, 42 சதவீத அளவுக்கு பணிகள் நிறைவடைந்துள்ளதாக கூறியுள்ளார்.

பெரம்பலூர் மக்களவை தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் 17 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

திருப்பரங்குன்றம் முருகன் கோவில் மலை உச்சியில் தீபம் ஏற்றுவதை தமிழக அரசு எவ்வித முகாந்திரமும் இன்றி தடை செய்ததாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது பேசிய பிஜேபி உறுப்பினர் திரு அனுராக் சிங் தாகூர், இதுதொடர்பாக, நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை மாநில அரசு பின்பற்றவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

நீதிபதி திரு ஜி ஆர் சுவாமிநாதன் உத்தரவை மாநிலத்தில் ஆளும் திமுக அரசு பின்பற்ற தவறிவிட்டதாகவும் அவர் கூறினார்.

அவரது கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து கோஷமிட்டனர்.

<<<<<<>>>>>>

போலி செய்திகளை தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், சமூக வலைதளம் உட்பட அனைத்து ஊடகங்களிலும் போலி செய்திகள் பரப்புவதை தடுப்பதற்கான சட்டங்கள் இருப்பதாக கூறினார்.

மத்திய அரசு தொடர்பான போலி செய்திகளை ஆய்வு செய்ய பத்திரிகை தகவல் அலுவலகத்தில் தனிப்பிரிவு செயல்பட்டு வருவதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நடிகர் ரஜினிகாந்தின் 75-ஆவது பிறந்த நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில், தமிழ் சினிமா கடந்து உலக அளவில் அரை நூற்றாண்டுகளாக தனது நடிப்பு திறனால் அனைவரது மனதையும் கவர்ந்துவரும் திரு ரஜினிகாந்துக்கு வாழ்த்துகள் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்தநாளையொட்டி, மத்திய கல்வி அமைச்சகத்தின் சார்பில், பாரத மொழிகள் விழா இன்று கொண்டாடப்பட்டது.

புதுதில்லியில் இதுதொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய மத்திய பள்ளிக்கல்வித்துறை செயலர் திரு சஞ்சய் குமார், சுப்பிரமணிய பாரதியாரின் சுதந்திரப் போராட்ட வேட்கையும், சமூக மாற்றத்திற்காக அவர் ஆற்றிய அரும்பணியையும் நினைவுகூர்ந்தார்.

தேசிய கல்விக்கொள்கையில் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றும் வகையில், மாணவர்கள் பல மொழிகளில் கற்று தேர்ச்சி பெறுவதற்கு ஆசிரியர்கள் ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாணவர்களின் மொழி குறிப்பாக சொல் ஆற்றலை வளர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அனைத்து மொழிகள் மற்றும் சமூகங்களின் ஒத்துழைப்பு மூலமாக நாட்டின் கலாச்சாரம் வலுப்பெற்று வருவதாகவும் திரு திரு சஞ்சய் குமார் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவையின் நடப்பாண்டு கூட்டத்தொடரை முடித்து வைப்பதற்கான அறிவிக்கையை ஆளுநர் திரு ஆர் என் ரவி இன்று வெளியிட்டுள்ளார்.

இவ்வாண்டு ஜனவரி 6-ஆம் தேதி தொடங்கிய நடப்பாண்டுக்கான கூட்டத்தொடர் முடிவடைந்துள்ள நிலையில் ஆளுநர் இன்று முறைப்படி முடித்து வைத்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

உலக எயிட்ஸ் தினத்தையொட்டி சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டிலேயே தமிழகத்தில்தான் கர்ப்பிணி பெண்களிடமிருந்து குழந்தைகளுக்கு HIV தொற்று பரவுவதை தடுப்பதற்கான சிகிச்சை வழங்கப்படுவதாக கூறினார்.

*(Voice Byte — மா. சு. - 42 Sec.* )

<<<<<<>>>>>>

பிரதமரின் கிராம சாலை திட்டத்தில் 25-ஆவது ஆண்டு செயலாக்க விழா திண்டுக்கல்லில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சியர் திரு சரவணன், கிராமங்களில் சாலை இணைப்பு வசதியை மேம்படுத்த இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

*(Voice Byte — சரவணன் - 35 Sec. )*

<<<<<<>>>>>>

தூத்துக்குடி ரயில் நிலையத்தில் தொழில்நுட்ப பணிகள் நடைபெறவிருப்பதால், தூத்துக்குடி — பாலக்காடு இடையேயான

பாலருவி விரைவு ரயில், நாளை மறுநாள் முதல் வரும் 27ஆம் தேதி வரை திருநெல்வேலி - தூத்துக்குடி இடையே இயங்காது என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சென்னை - தூத்துக்குடி இடையேயான முத்துநகர் விரைவு ரயில், வரும் 20ஆம் தேதி முதல் 23ஆம் தேதிவரை தூத்துக்குடி - வாஞ்சி மணியாச்சி இடையே இயங்காது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டுவரும் பெரியார் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள புறகாவல் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு இன்று ஆய்வு செய்தார்.

--------------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் வரும் 20-ஆம் தேதி நடைபெறவுள்ள தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தகுதியுள்ள இளைஞர்கள் கலந்துகொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் திரு பிரதாப் தெரிவித்துள்ளார்.

-----------------

காஞ்சிபுரம் மாவட்டம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள துணை செவிலியர் பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

---------------

தஞ்சாவூரில், இந்திய விமானப்படையில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்த விளம்பர வாகனத்தினை மாவட் ஆட்சியர் திருமதி பிரியங்கா பங்கஜம், ஏர் கமாண்டர் கிரிஷ் ஆகியோர் கொடியசைத்து தொடங்கிவைத்தனர்.

----------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் ரயில் நிலையத்தில் **52** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை தெற்கு ரயில்வே பொது மேலாளர் திரு ஆர் என் சிங் இன்று ஆய்வு செய்தார்.

-----------------

நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை மருத்துவமனையில் தேவையற்ற பொருட்களை சேகரிக்கும் தூய்மை இயக்க உறுதிமொழி ஏற்கும் நிகழ்வு நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா **234** ரன் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவரில், **6** விக்கெட் இழப்பிற்கு **433** ரன் எடுத்தது.

பின்னர் **434** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி **50** ஓவரில் **7** விக்கெட் இழப்பிற்கு **199** ரன் மட்டுமே எடுத்தது.

----------------

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Unnati Hooda** மற்றும் **Tasnim Mir** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<**END**>>>>>>